# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2293/28 - 2022 අගෝස්තු මස 17 වැනි බදාදා - 2022.08.17**

2293/28 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பிலக்கம்: KDS/KGK/4/2/(2)/2018/02/04.

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/12/2018/WS/ 290.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவின், வெவதென்ன (274) கிராம அலுவலர் பிரிவில், அமுபதகடஹேன, முல்லே பிஹில்ல கிராமத்திலமைந்த நில அளவை நாயகம் சார்பாக கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவை அதிகாரியினால் அளந்து 2022.06.30 ஆந் திகதியிடப் பட்டு தயாரிக்கப்பட்ட CM 320385 வரைபடத்தின் வலய இலக்கம் 06 இல் 27 ஆம் படிவத்தில் காணித்துண்டின் இலக்கம் 03 எனக் குறிப்பிடப்பட் டுள்ள காணியில் 0.0440 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ்க்காணும் காணித்துண்டு.

01. **துண்டு இல. 3**

காணியின் பெயர்: அமுபதகடஹேன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: கல்யாண பிரபோத திசாநாயக்க, இலக்கம் 305, அமுபதகடஹேன, பல்லேகம; விஸ்தீரணம்: 0.0440 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28

ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, கண்டி கடவத்சத்தர மற்றும் கங்கவட்டகோரளை பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்தும் படியும், மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மை யையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யூ. ஜே. எம். எஸ். எஸ். பீ. ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கண்டி கடவத்சத்தர மற்றும்,
கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலகம்,
கண்டி கடவத்சத்தர மற்றும்,
கங்கவட்ட கோரளை.
2022, ஓகத்து 10.

EOG 08 - 0143